SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லறை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
குரோதி வருடம் கார்த்திகை 2
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 14

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, நவம்பர் 17, 2024 ● வெளியீடு: 18-11-2024, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 130 ● 6 பக்கம் ● ரூ.6

வங்கக் கடலில்

23 ஆம் தேதி காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது

வானிலை ஆய்வாளர்கள் தகவல்

சென்னை, நவ. 17-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் சூழலில், பரவலாக மழை இன்னும்தீவிரம் அடையவில்லை. அட்லாண்டிக், பசிபிக் பெருங்கடலில் தாமதமான தீவிர சூறாவளி புயல்கள், இந்திய பெருங்கடலில் வலுவான சலனங்கள் உருவாகாதது போன்ற காரணங்களால் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடையாததற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

வருகிற 20ந் தேதிக்கு பிறகு கடல் சார்ந்த அலைவுகள் இந்திய பெருங்கடலுக்கு சாதகமாக அமையும் என்பதால், இம்மாத இறுதியில் இருந்து அடுத்த மாதம் (டிசம்பர்) இறுதி வரை அடுத்தடுத்த புயல் சின்னங்களை வங்கக்கடலில் உருவாக்கும் என எதிர்ப்பார்ப்பதாகவும், வருகிற 25ந்தேதி (திங்கட்கிழமை) முதல் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைய உள்ளதாகவும் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி மழையை கொடுக்கவில்லை என்றாலும், நேற்று முன்தினம் முதல் கிழக்கு திசை காற்றினால் தமிழகத்தில் மழை பெய்து வருவதை பார்க்க முடிகிறது. அதிலும் தென், மேற்கு, டெல்டா, வட கடலோர மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) டெல்டா மாவட்டங்களில் மழை தொடரும் எனவும், சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் இன்றுடன் மழை விலகும் எனவும், அதன் பின்னர், நாளை (திங்கட்கிழமை) கடலூர் உள்ளிட்ட சில பகுதிகளிலும், நாளை மறுதினம் (செவ்வாய்க் கிழமை) டெல்டா, மேற்கு மாவட்டங்களிலும் மழை விலகும் எனவும் தனியார் வானிலை ஆய்வாளர் டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்தர் தெரிவித்தார். மேலும் அவர், 'சென்னையில் இன்று இரவில் இருந்தும், தமிழ்நாடு முழுவதும் பரவலாக வருகிற 20ந் தேதியில் இருந்தும் பருவமழை குறைந்து பனிப்பொழிவு தொடங்கும். அதன் தொடர்ச்சியாக வருகிற 23 (சனிக்கிழமை) அல்லது 24 (ஞாயிற்றுக்கிழமை)ந் தேதிகளில் தெற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளது. இது தாழ்வு மண்டலமாகவோ அல்லது புயலாகவோ வலுப்பெறலாம். இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பருவமழை தீவிரம் அடையத் தொடங்கும் என்றும்' கூறினார்.

தலைமறைவாக இருந்த நடிகை கஸ்தூரி ஐதராபாத்தில் கைது

சென்னை, நவ. 17-

சென்னையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய நடிகை கஸ்தூரி தெலுங்கு மக்களுக்கு எதிராக சர்ச்சைக்குரிய வகையில் பேசினார். இது கடும் விமர்சனத்தை எழுப்பியது. அத்துடன் பல்வேறு காவல்நிலையங்களில் கஸ்தூரிக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டது.

புகார் அடிப்படையில் சென்ன எழும்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இதனைத்தொடர்ந்து கஸ்தூரி தலைமறைவானார். தவைமறைவான கஸ்தூரி முன்ஜாமின் கேட்டு விண்ணப்பித்திருந்தார். முன்ஜாமினை நீதிமன்றம் நிராகரித்தது.

இதற்கிடையே தலைமறைவானதால் தனிப்படை அமைக்கப்பட்டு, போலீசார் தேடிவந்தனர். தனிப்படை போலீசாருக்கு கஸ்தூரி ஐதராபாத்தில் மறைந்து இருப்பது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து போலீசார் ஐதரபாத்திற்கு சென்று கஸ்தூரியை கைது செய்தனர். ஐதராபாத்தில் கதைது செய்யப்பட்ட கஸ்தூரி நாளை நீதிபதி முன் ஆஜர்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விமான நிலைய விரிவாக்கம்: போராட்டம் தற்காலிக வாபஸ்

மதுரை, நவ. 17-

மதுரை விமான நிலையத்தில் விரிவாக்கப்பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. இதற்காக, அந்த பகுதியை சுற்றி உள்ள கிராம மக்களிடம் இருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டது. இந்தநிலையில் இடம் கொடுத்த சின்ன உடைப்பு கிராம மக்கள் மாநகராட்சி எல்கைக்குள் தங்களுக்கு 3 சென்ட் இடம் மற்றும் வீடு கட்டி தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்தி வந்தனர். இதனை தொடர்ந்து சின்ன உடைப்பு கிராம மக்களுடன் வருவாய் துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் இன்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் உடன்பாடு ஏற்படாத நிலையில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் நிலம் கையகப்படுத்த வந்த அதிகாரிகளை கண்டித்து மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியின் மீது ஏறி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில், சின்ன உடைப்பு பகுதியில் விமான நிலைய விரிவாக்கத்துக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு தெரிவித்து நடந்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. வீடுகளை காலி செய்ய 6 நாட்கள் (ஒருவாரம்) அவகாசம் அளித்ததை அடுத்து போராட்டம் தற்காலிக வாபஸ் பெறப்பட்டுள்ளது. விமான நிலையத்துக்கு நிலம் கையகப்படுத்தினால் பணம் மட்டுமே கொடுக்க முடியும்: மாற்று இடம் கொடுக்க முடியாது என்று மதுரை மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் பைக், கார்களின் பதிவு வரி உயருகிறது

புதுச்சேரி, நவ. 17-

புதுச்சேரி மாநிலத்தில் 10 லட்சம் இருசக்கர வாகனங்கள், 1.5 லட்சம் கார்கள் பதிவு செய்யப்பட்டு, புதுச்சேரி மட்டுமின்றி, பிற மாநிலங்களின் சாலைகளில் இயங்குகின்றன.

இருசக்கர வாகனங்களை பொருத்தவரை என்ஜின் சி.சி., அடிப்படையில் வாகன பதிவு வரி தற்போது வசூலிக்கப்படுகிறது. 170 சி.சி., வரையுள்ள பைக்குகளுக்கு ரூ.850, 170 சி.சி., மேல் உள்ள டூவீலர்களுக்கு ரூ.1,200 வசூலிக்கப்படுகிறது. சராசரியாக 1 சதவீதம் என்ற இந்த வரி, இருசக்கர வாகனங்களுக்கு வசூலிக்கப்படுகிறது. இந்த என்ஜின் சி.சி., அடிப்படையிலான பதிவு வரியை கைவிட போக்குவரத்து துறை முடிவு செய்துள்ளது. இனி வாகன மதிப்பில் வரியை வசூலிக்க திட்டமிட்டுள்ளது. எனவே தற்போதுள்ள 1 சதவீதத்திற்கு பதிலாக 2 சதவிகிதமாக வாகன பதிவு வரியை வசூலிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் கார்களுக்கு இணையாக பல லட்சம் மதிப்பில் சொகுசு டூவீலர்கள் சாலையில் ஓடுகின்றன. இந்த பைக்குகளுக்கு ரூ.1,200 தான் பதிவு வரி வசூலிக்கப்படுகிறது. எனவே சொகுசு பைக்குகளுக்கு பதிவு வரியை உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ரூ.5 லட்சத்திற்கு மேல் வாங்கப்படும் சொகுசு பைக்குகளுக்கு 8 சதவீதம் பதிவு வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதே போல் ரூ.40 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள கார்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் 7 சதவீத வாகன பதிவு வரியை, 8 சதவீதமாக உயர்த்தவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ரூ.150 கோடி போக்குவரத்து துறை வரி ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் போக்குவரத்து துறை, 156 கோடியாக வருமானம் ஈட்டியது. இந்த ஆண்டு ரூ.171 கோடியாக போக்குவரத்து துறை இலக்கு நிர்ணயித்துள்ள சூழ்நிலையில் இதுவரை ரூ.155 கோடியாக வருமானம் ஈட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் புதிய பிரதமர் யார்?-நாளை அறிவிக்கிறார் அதிபர் திசநாயகா

புதுடெல்லி, நவ. 17-

இலங்கையில் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட அனுரா குமார திசநாயகா வெற்றிப்பெற்று அதிபரானார்.

அந்த சமயத்தில் இலங்கை பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு 3 எம்.பி.க்கள் மட்டுமே இருந்ததால் அவர் பாராளுமன்றத்தை கலைத்து உத்தரவிட்டார். இடைக்கால பிரதமராக பெண் எம்.பி. ஹரிணி அமரசூரியாவை நியமித்தார்.

இந்த நிலையில் 225 இடங்களை கொண்ட இலங்கை பாராளுமன்றத்துக்கு கடந்த வியாழக்கிழமை தேர்தல் நடந்தது. இதில் 159 இடங்களை கைப்பற்றி தேசிய மக்கள் சக்தி கூட்டணி அமோக வெற்றிப் பெற்றது. 3ல் இரண்டு பங்கு இடங்களை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது.

இந்த நிலையில் இலங்கையின் புதிய பிரதமர் மற்றும் மந்திரி சபையை அதிபர் திசநாயகா நாளை (திங்கட்கிழமை) நியமிப்பார் என்று தேசிய மக்கள் சக்தி கூட்டணி அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் மூத்த செய்தி தொடர்பாளர் டில்வின் சில்வா செய்தியாளர்களிடம் கூறுகையில், "நாங்கள் திங்கட்கிழமை ஒரு மந்திரிசபையை நியமிப்போம். அதன் பலம் 25க்கும் குறைவாக இருக்கும். பொது செலவை குறைக்க சிறிய அளவிலான மந்திரி சபையை தேசிய மக்கள் சக்தி கூட்டணி பரிந்துரைக்கிறது. அதே வேளையில் துணை மந்திரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். மந்திரிகளுக்கு துறைகளை ஒதுக்குவதில் அறிவியல்பூர்வமான முடிவுகள் எடுக்கப்படும்" என கூறினார்.

இலங்கை அரசியலமைப்பின் 46வது பிரிவின்படி, மொத்த கேபினட் மந்திரிகளின் எண்ணிக்கை 30 ஆகவும், துணை மந்திரிகளின் எண்ணிக்கை 40 ஆகவும் வரையறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே புதிய பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் வருகிற 21ந்தேதி தொடங்கும் எனவும், அப்போது அதிபர் திசநாயகா தனது அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை சமர்பிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 225 உறுப்பினர்களைக் கொண்ட புதிய பாராளுமன்றத்தில் 150க்கும் மேற்பட்ட புதிய முகங்களுக்காக நவம்பர் 25, 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் புதிய எம்.பி.க்களுக்கான அறிமுகக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன் விழிப்புணர்வு பேரணி: புதுச்சேரி ஆளுநர் தொடங்கி வைத்தார்

INDIAN ASSOCIATION OF MEDICAL MICROBIOLOGISTS
IAMM - PUDUCHERRY CHAPTER
WORLD AMR AWARENESS WEEK 2024
EDUCATE. ADVOCATE. ACT NOW.

இந்திய நுண்ணுயிரியலாளர் சங்கம் புதுச்சேரி கிளை சார்பில், கடற்கரை சாலை, காந்தி சிலை அருகில் நடைபெற்ற நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன் விழிப்புணர்வு பேரணியை துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். புதுச்சேரியில் உள்ள, பல்வேறு மருத்துவக் கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் பேரணியில் பங்கேற்றனர். ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால், அரசு பொது மருத்துவமனையின் இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் செவ்வேள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் குறைதீர் முகாமில் 120 புகார் மனுக்கள் பெறப்பட்டது

காரைக்கால், நவ. 17-

காரைக்கால் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் முகாமில் பெறப்பட்ட 120 புகார் மனுக்கள் பெறப்பட்டது.

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சர் உத்தரவின்பேரில், காரைக்கால் மாவட்டத்தில், மாதந்தோறும் 15ந் தேதி பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், நேற்று காலை 9.30 மணி முதல், மதியம் 12.30 மணி வரை,மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் மணிகண்டன் தலைமையில், பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமில், மாவட்ட துணை கலெக்டர்கள் அர்ஜுன் ராமகிருஷ்ணன் (வருவாய்), செந்தில்நாதன்(நிர்வாகம்), வெங்கடகிருஷ்ணன் (பேரிடர் மேலாண்மை), உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ், குடிமைப் பொருள் வழங்கல் துறை துணை இயக்குனர் சச்சிதானந்தம், நகராட்சி ஆணையர் சத்யா மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள், முதன்மை கல்வித்துறை அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். தொடர்ந்து, கலெக்டர் மணிகண்டன் பேசியதாவது: கடந்த மாதம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 86 மனுக்களில், 36 மனுக்கள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. ஆனால் கடந்த மாதம் பெறப்பட்ட அதிக அளவில் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருவது ஏற்புடையதல்ல. எனவே காலம் தாழ்த்தாமல் அனைத்து மனுக்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காண வேண்டும். பெறப்பட்ட அனைத்து மனுக்கள் மீதும், குறித்த நேரத்தில் குறித்த தினங்களில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தந்த மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மனுதாரர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்க வேண்டும். என அறிவுறுத்தினார். பின்னர், இந்த மாதத்திகான பொதுமக்கள் புகார்களை, கலெக்டர் பெற்றுகொண்டு, அந்தந்த அதிகாரிகளை அழைத்து விளக்கம் கேட்டார். குறிப்பாக, நேற்று சிவப்பு நிற குடும்ப அட்டை வேண்டியும், எல். ஜி. ஆர் பட்டா வேண்டியும், தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக குடியிருப்புவாசிகளுக்கு தொந்தரவு ஏற்படாமல் இருக்க, வடிகால் வாய்க்கால்கள் தூர் வாருதல்,சாலைகளை சீரமைத்தல், மின் விளக்கு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்துதரக்கோரி 120 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்கள் மீது குறித்த தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் மணிகண்டன் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

மக்களை தேடி இலவச இயன் முறை மருத்துவ முகாம்

செஞ்சி, நவ. 17-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்தில் சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் காஞ்சிபுரம் மீனாட்சி இயன்முறை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இணைந்து மக்களை தேடி இலவச இயன் முறை (பிசியோதரபி) மருத்துவ முகாம் நடந்தது. சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார மைய இயன்முறை (பிசியோதரபி) மருத்துவ அலுவலர் நாராயணமூர்த்தி தலைமையில் மீனாட்சி இயன்முறை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் குழுவுடன் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் பொன்பத்தி கிராமத்தில் இயன்முறை மருத்துவம் குறித்து பொதுமக்களிடம் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் அத்தியூர், கோனை, காரை, வரிகல், மீனம்பூர், சிட்டாம்புண்டி, ஆலம் பூண்டி, சத்தியமங்கலம் ஆகிய கிராமங்களில் பொதுமக்களிடம் சென்று கிராமங்களில் இயன் முறை உடற்பயிற்சி பயன்களும் இயன்முறை பயிற்சியும் இக்குழுவினரால் வழங்கப்பட்டது. மருத்துவ முகாமில் மீனாட்சி கல்லூரி மாணவர்கள் ஜோஸ்வா, ஜாய்சன் முகமது, ஆதில், இம்ரான், அகமது பாசிஸ், சூர்யா, சிவ கிருஷ்ணன், விஸ்வா, முத்துக்குமார் உள்ளிட்ட மாணவர்கள் கலந்து கொண்டு சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இயன்முறை இலவச பயிற்சியை வழங்கினார்.

சுவாமிமலையில் ஐப்பசி மாத பௌர்ணமி கிரிவலம்

சுவாமிமலை, நவ. 17-

சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி வழிபாட்டுக்குழு டிரஸ்ட் சார்பில் ஐப்பசி மாத பௌர்ணமி கிரிவலம் வல்லப கணபதி சன்னதியில் இருந்து துவங்கியது. மருத்துவர் ஸ்ரீராம், மருத்துவர் அரவிந்த் ஆகியோர் தலைமை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக திண்டுக்கல் ராஜேஷ் கண்ணன், திண்டுக்கல் ரங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கிரிவலத்தில் சிவத்திரு. திருவருட்செம்மல் இறைநெறி இமயவன் வழிகாட்டுதலுடன் கூட்டு வழிபாடு மற்றும் கிரிவலமும் நடைபெற்றது. சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி வழிபாட்டுக்குழு நிறுவனர் கேசவராஜன், நிர்வாக அறங்காவலர் சிவசங்கரன், செயலாளர் சேகர், பொருளாளர் சுவாமிநாதன், அறங்காவலர்கள் மாணிக்கம், சண்முகம், நெடுஞ்செழியன், ஆலோசகர் நடராஜர் கலைச்செல்வன் ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர். கிரிவலத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு மருத்துவர் ஸ்ரீராம், திண்டுகள் வினோத்குமார், நாமக்கல் தேவராசு குடும்பத்தினர் அமுது வழங்கினர்.

ஆலோசனைக் கூட்டம்

திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி தலைமையில் மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு வழங்குவது குறித்து அனைத்து மாநகராட்சி பள்ளி தலைமையாசிரியர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் துணை ஆணையாளர்கள் சுந்தரராஜன், சுல்தானா, மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாமை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், பாப்பனி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் சந்தோஷ்குமார் உள்ளார்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் ஆட்சியர் ஆய்வு

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட வாழை இலைகள் பிற மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலைத்திருவிழா போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கல்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், சோ.கீழ்நாச்சிப்பட்டு ஊராட்சியில் உள்ள காந்திநகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக அரசு பள்ளி மாணவர்களுக்கான கலைத்திருவிழா 2024-25க்கான மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு மதிய உணவினை வழங்கினார்.

காங்கிரஸ் ஆட்சி குறித்தும், என்னை பற்றியும் நமச்சிவாயம் விமர்சித்தால் பல்வேறு பின் விளைவுகளை சந்திக்க நேரிடும்

முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி பகிரங்க எச்சரிக்கை

புதுச்சேரி, நவ. 17–

காங்கிரஸ் ஆட்சி குறித்தும், என்னை பற்றியும் விமர்சித்தால், நமச்சிவாயம் பல்வேறு பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என, முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: புதுச்சேரியில் சட்டசபை தேர்தலின் போது மாநில அந்தஸ்து பெற்று தருவோம் என, மக்களை ஏமாற்றி ஓட்டுகளை வாங்கிய என்.ஆர்.காங்கிரஸ், பாஜக அரசு மாநில அந்தஸ்து பெற்று தருவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சி வந்தால் புதுவைக்கு மாநில அந்தஸ்து பெறுவோம்.

அதானியிடம் மின்துறையை ஒப்படைக்க கையெழுத்து போட்டு, அனைத்து வேலையும் முடித்து விட்டனர். மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர் நமச்சிவாயம் பிரீபெய்டு திட்டத்தை மாற்றி போஸ்ட்பெய்டு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார். ஆனால், சபாநாயகர், முதலமைச்சர், அமைச்சர் மின் துறை தனியார் மயமாகாது என கபட நாடகம் ஆடுகின்றனர்.

தீபாவளிக்கு முன் ரேஷன் கடைகளை திறந்து மளிகை பொருட்களை வினியோகம் செய்வோம் என முதலமைச்சர் கூறினார். இத்திட்டத்தையும் மேட்டுப்பாளையத்தில் தொடங்கி வைத்தார். ஆனால், எந்த ரேஷன் கடையும் திறக்கவில்லை. ரேஷன் கடைகளுக்கு வாடகை தரவில்லை. ஊழியர்களுக்கு சம்பளம் தரவில்லை. இந்த நிலையில் இப்போது அங்கன்வாடிகளை தேடி வருகின்றனர் ஆனால், மக்கள் ரேஷன் கடைகளை தேடி சுற்றி வருகின்றனர். புதுவை மக்களை தொடர்ந்து ஆட்சியாளர்கள் ஏமாற்றி வருகின்றனர். சில இடங்களில் வழங்கிய அரிசியும் தரமற்றதாக உள்ளது என குற்றச்சாட்டு வந்துள்ளது. இதில் மிகப்பெரிய அளவில் கையூட்டு பெற்றப்பட்டுள்ளது.

புதுவை முதலமைச்சராக நான் இருந்தபோது 13 ரவுடிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்தேன். அமைச்சர் நமச்சிவாயம் எங்கள் ஆட்சியில் எதிர்க்கட்சியில் இருந்தது போல தற்போது பேசி வருகிறார். பல முக்கியத்துறைகளை வகித்து பதவி சுகம் அனுபவித்த நமச்சிவாயம், காங்கிரஸ் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என, இப்போது கூறுகிறார். அப்போது ஏன் அவர் இது குறித்து எதுவும் பேசவில்லை. அப்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமைச்சரவையிலிருந்து ஏன் விலகவில்லை?

ஆயுள் தண்டனை கைதி ஒருவரை விடுதலை செய்ய நமச்சிவாயம் என்னிடம் கேட்டார். அவரை விடுதலை செய்ய முடியாது என உறுதியாக கூறினேன். நமச்சிவாயம் என்னைப் பற்றியும் ஆட்சியைப் பற்றியும் விமர்சித்தால் அவர் எந்த ரவுடிக்காக பரிந்துரை செய்தார் என பொது மக்களிடம் பகிரங்கமாக தெரிவிப்பேன்.

புதுச்சேரி முதலமைச்சர், உள்துறை அமைச்சர் என அனைவரும் ரவுடிகளுக்கு ஆதரவாக இருப்பதால், போலீசார் சரியாக செயல்பட முடியாத நிலை உள்ளது. தனது சொத்தைக் காப்பாற்ற பாஜகவில் சேர்ந்து அமைச்சரான நமச்சிவாயம் நாவடக்கத்துடன் பேச வேண்டும். இல்லையெனில், பல்வேறு பின் விளைவுகளை சந்திக்க நேரிடும். புதுவையில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போக முதலமைச்சர் ரங்கசாமியும், அமைச்சர் நமச்சிவாயமும் தான் காரணம். இது புதுவை மக்களுக்கும் தெரியும். கட்சித் தலைமை அனுமதி கொடுத்தால் புதுச்சேரி மாநிலத்தில் 30 தொகுதியில் எந்த தொகுதியில் வேண்டுமானாலும் போட்டியிடுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமை ஆட்சியர் ஆய்வு

விழுப்புரம், நவ. 17–

விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காணை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் பெரும்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணி 2025ன் கீழ், வாக்களார் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கம் மற்றும் திருத்தம் தொடர்பாக நடைபெற்று வரும் சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட தேர்தல் அலுவலர்–மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்பேரிலும் மற்றும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவுரையின் பேரிலும், விழுப்புரம் மாவட்டத்தில் 01.01.2025ஐ தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப்பணியின் கீழ் காலை 10.00 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்ப்பதற்கு விரும்பும் வாக்காளர்கள் படிவம் 6லும், வெளிநாட்டில் வசிப்பவர்கள் பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6கிலும், வாக்காளர் பட்டியலில் ஆதார் எண் இணைக்க படிவம் 6பிலும், பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம்7லும், பெயர், வயது, பாலினம், உறவுமுறை, கதவு எண், முகவரி முதலிய பதிவுகளில் திருத்தம் செய்வதற்கும், ஒரு சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே வாக்காளர்களின் வசிப்பிடம் மாற்றுதல், வேறு சட்டமன்ற தொகுதிக்கு வாக்காளர் வசிப்பிடம் மாற்றம் ஆகியவைகளுக்கு படிவம் 8½ம் சிறப்பு முகாம்களின் போது மனுக்களைக் கொடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

புதுவைப் பல்கலைக்கழகத்தில் இந்திய அறிவு முறைகளை கொண்டாடும் வகையில் ‘தேசிய ஞானகும்பம்’ நிகழ்ச்சி

அமைச்சர் நமச்சிவாயம் தகவல்

புதுச்சேரி, நவ. 17–

இந்திய அறிவு முறைகளை கொண்டாடும் வகையில், பல்கலைக்கழகத்தில் மூன்று நாட்களுக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும் என, அமைச்சர் நமச்சிவாயம் தெரிவித்தார்.

புதுவை உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: புதுவை அரசும், பல்கலைக்கழகமும், கல்வி மேம்பாட்டு கேந்திரமும் இணைந்து ‘தேசிய ஞானகும்பம்’ என்ற இந்திய அறிவு முறைகளை கொண்டாடுதல், கல்வியில் தாய்மொழி கல்வியை செயல்படுத்துதல் என்ற தலைப்பில் வருகிற 21ம் தேதி தொடங்கி 23ம் தேதி வரை மூன்று நாள் பல்கலைக்கழக கலாச்சார மாநாட்டு மையத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகிறது. 21ம் தேதி பிற்பகல் காலாப்பட்டு அசோக் ஹோட்டல் அருகில் இருந்து மாணவர்கள் ஊர்வலத்துடன் தொடக்க விழா நடக்கிறது. ஊர்வலத்தை தேசிய கல்வி மேம்பாட்டு கேந்திர செயலாளர் அத்துல் கோத்தாரி, கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து பாரத அறிவு முறைகள் என்ற கண்காட்சியை சபாநாயகர் செல்வம், பேராசிரியர் வன்னியராஜன் ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர். மாலை 5 மணிக்கு கொச்சின் அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழக பேராசிரியர் நந்தகுமாரின் சிறப்பு சொற்பொழிவு நடக்கிறது. மாலை 6.30 முதல் 7.30 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

மறுநாள் 22ம் தேதி காலை 9.30 மணிக்கு முனைவர் சிவராமன் தலைமையில் கர்நாடக இசை நிகழ்ச்சி நடக்கிறது.

தொடர்ந்து தொடக்க விழா நடக்கிறது. விழாவில், புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் தரணிக்கரசு வரவேற்கிறார். கல்வி மேம்பாட்டு கேந்திரா தேசிய செயலாளர் அத்துல் கோத்தாரி நோக்க உரையாற்றுகிறார். எனது முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில் முதலமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம் சிறப்புரையாற்றுகின்றனர்.

மயிலம் பொம்மபுரம் ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் கோவை கவுமார மடாலயம் ஆதீனம் ராமநாத குமர குருபர சுவாமிகள் ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவு நடக்கிறது. கவர்னர் கைலாஷ்நாதன் நிறைவுரையாற்றுகிறார். தொடர்ந்து கருத்தரங்கு அமர்வுகள் நடக்கிறது. 23ம் தேதி தொடர்ந்து கருத்தரங்கு அமர்வுகள் நடக்கிறது. அன்று மாலை நிறைவு விழா நிகழ்ச்சிகள் நடக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கல்வியாளர்கள், அறிஞர்கள், பலதுறை மாணவர்கள் பங்கேற்கின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது பல்கலைக்கழக துணை வேந்தர் தரணிக்கரசு மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உடன் இருந்தனர்.

போலி சான்றிதழ் மூலம் மண்ணின் மைந்தர்கள் உரிமை பாதிக்கப்படுகிறது: கலெக்டர் குலோத்துங்கனிடம் பொதுநல அமைப்புகள் புகார்

புதுச்சேரி, நவ. 17–

போலி சான்றிதழ் மூலம் மண்ணின் மைந்தர்கள் உரிமை பறிக்கப்படுகிறது என, பொதுநல அமைப்புகள் கலெக்டர் குலோத்துங்கனை சந்தித்து புகார் மனு அளித்தனர்.

புதுச்சேரி கலெக்டர் அலுவலகத்தில் மாதாந்திர பொதுமக்கள் குறை தீர்வு கூட்டம் நடந்தது. நூற்றுக்கும், மேற்பட்ட பொதுமக்கள், பொதுநல அமைப்புகள் கலெக்டர் குலோத்துங்கனை சந்தித்து மனு அளித்தனர்.

முகாமில் 121 மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இட ஒதுக்கீடு மறுக்கப்பட்ட பட்டியல் இயக்க தலைவர் வீரமணி தலைமையில் பலர் மனு அளிக்க கலெக்டர் அலுவலகம் வந்தனர். உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தாய் வழியில் எஸ்.சி., எஸ்.டி., மக்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது ஏன்? என, கேட்டு அவ்வமைப்பினர் தர்ணாவில் ஈடுபட்டனர்.

சென்டாக் மாணவர் மற்றும் பெற்றோர் நலச் சங்கத் தலைவர் நாராயணசாமி அளித்த மனுவில், ‘மருத்துவ படிப்பில் என்.ஆர்.ஐ., ஒதுக்கீட்டு இரண்டாம் கட்ட கலந்தாய்வில் சேர்ந்துள்ள 37 மாணவர்களில், பலர் போலி சான்றிதழ் சமர்ப்பித்துள்ளனர்.

எனவே, தாசில்தார் தலைமையில் சான்றிதழ்களை ஆய்வு செய்ய வேண்டும்‘ என, தெரிவிக்கப்பட்டு இருந்தது.

பெற்றோர் மாணவர் சங்கத் தலைவர் பாலா தரப்பில், ‘உயர்கல்வி வேலைவாய்ப்பிற்கு வருவாய்த்துறை போலியான வர்களுக்கு, தகுதி இல்லாதவர்களுக்கு சாதி, குடியிருப்பு சான்றிதழ் வழங்குவதால் மண்ணின் மைந்தர்கள் உரிமை பறிக்கப்படுகிறது. இதனை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்‘ என, மனு அளிக்கப்பட்டது.

அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் உலக அறிவியல் தினம்

SCHOOL OF ALLIED HEALTH SCIENCES
VIMS HOSPITAL CAMPUS, SALEM
VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION
E-Cell

சேலம், நவ. 17–

அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் எடுத்துரைத்து சமூகத்தின் கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டில் அறிவியலின் பங்களிப்பினை பொதுமக்களுக்கு உணர்த்தும் நோக்கிலும் அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் கொண்டாப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் தொழிற்முனைவோர் அமைப்பு மற்றும் புதுமை படைத்தல் அமைப்பு ஆகியவை இணைந்து விழிப்புணர்வு நிகழ்வினையும், மாணவர்களுக்கான ஐடியேத்தான் போட்டியையும் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர்.கணேசன் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் நடத்தியது.

நிகழ்ச்சிக்கு துறையின் டீன் பேராசிரியர் டாக்டர்.செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்புரை வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக சேலம் தமிழ்நாடு ஸ்டார்ட் அப் திட்ட அலுவலர் மோகன் பங்கேற்று இன்றைய சூழலில் புதுமை அறிவியல் தொழிற்நுட்பத்தின் அவசியம் சார்ந்து சிறப்புரையாற்றினார்.

மேலும் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட புதுமை அறிவியல் சார்ந்த கட்டுரை சமர்பித்தல் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் தொழிற்முனைவோர் அமைப்பின் தலைவர் பேராசிரியை தமிழ்சுடர், புதுமை கண்டுபிடிப்பு மையத்தின் தலைவர் இணை பேராசிரியர் சதீஸ்குமார் மற்றும் முத்தமிழ்செல்வன் ராம்பிரசாத் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்திய கார் பந்தய திருவிழாவில் முதல் வெற்றியைப் பெற்றார் கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங் அணி சோஹில் ஷா



கோவை, நவ. 17–

ரேசிங் புரமோஷன்ஸ் நிறுவனம் நடத்தும் இந்திய கார் பந்தய திருவிழா, கோவை காரி மோட்டார் ஸ்பீட்வேயில் நேற்று நடைபெற்றது. இதில் கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங் அணியைச் சேர்ந்த சோஹில் ஷா முதல் வெற்றியைப் பெற்றார்.இந்திய ரேசிங் லீக்கில் 23 வயதான ஷா பெற்ற முதல் வெற்றி இதுவாகும். மேலும் அவர் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் வந்த மூத்த வீரர்களான ஹைதராபாத் பிளாக்பேர்ட்ஸ் அணியைச் சேர்ந்த நீல் ஜானி மற்றும் ஸ்பீட் டெமான்ஸ் டெல்லியைச் சேர்ந்த அல்வாரோ பேரன்டே ஆகியோரை முந்திச் சென்று முதலிடம் பிடித்தார். இருப்பினும், பேரன்டே 5 வினாடி பெனால்டியில் டாக்செய்யப்பட்டார். இதன் காரணமாக சென்னை டர்போ ரைடர்ஸ் அணியின் ஜான் லான்காஸ்டர் 3வது இடத்திற்கு முன்னேறினார்.17.156 வினாடி வெற்றி வித்தியாசம், இந்த சீசனில் ஷாவின் சிறப்பான செயல்திறனைக் காட்டுகிறது. இந்தநிலையில் பந்தயம் துவங்கியதில் இருந்தே ஷா சிறப்பாக காரை ஓட்டி ஒவ்வொரு சுற்றையும் சிறப்பாக கடந்தார். ஒவ்வொரு சுற்றிலும் ஜானி, லான்காஸ்டர் மற்றும் பேரன்டே ஆகியோருக்கு கடும் சவாலாக இருந்தார்.இந்த வெற்றி குறித்து ஷா கூறுகையில், பல்வேறு போட்டிகளில் நான் பங்கேற்ற நிலையில் இன்று எனக்கு கிடைத்த இந்த வெற்றி குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஜானி, பேரன்டே மற்றும் லான்காஸ்டர் போன்ற சிறந்த வீரர்கள் பங்கேற்ற இந்த போட்டியில் பங்கேற்றது எனக்கு மிகுந்த உற்சாகத்தை தருகிறது என்றார்.இந்தியன் ரேசிங் லீக் (பந்தயம்1, டிரைவர்ஏ) 25 நிமிடம்+1 சுற்று: 1. சோஹில் ஷா (இந்தியா, கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங்) (26 நிமிடங்கள், 34.598 வினாடிகள்); 2. நீல் ஜானி (சுவிட்சர்லாந்து, ஹைதராபாத் பிளாக்பேர்ட்ஸ்) (26:51.754); 3. ஜான் லான்காஸ்டர் (யுகே, சென்னை டர்போ ரைடர்ஸ்) (26:54.848). சிறந்த சுற்று : சோஹில் ஷா (01:03.088).

பார்முலா 4 இந்திய ஓபன் (பந்தயம்1, 25 நிமிடம்+1 சுற்று): 1. அகில் அலிபாய் (தென் ஆப்பிரிக்கா, ஹைதராபாத் பிளாக்பேர்ட்ஸ்) (26:14.474); 2. ருஹான் ஆல்வா (இந்தியா, ஷ்ராச்சி ரர் ராயல் பெங்கால் டைகர்ஸ்) (26:15.614); 3. ஹேடி நோவா மிமாசி (கனடா, சென்னை டர்போ ரைடர்ஸ்) (26:17.254). சிறந்த சுற்று: மிமாசி (01:10.638).

ஜேகே டயர்எப்எம்எஸ்சிஐ தேசிய ரேசிங் சாம்பியன்ஷிப்:

எல்ஜிபி பார்முலா 4 (பந்தயம்1, 15 சுற்றுகள்): 1. டிஜில் ராவ் (பெங்களூரு, டார்க் டான் ரேசிங்) (22:02.750); 2. சரண் விக்ரம் டிமார்ஸ் (சென்னை, மொமென்டம் மோட்டார்ஸ்போர்ட்ஸ்) (23:03.725); 3.துருவ் கோஸ்வாமி (பெங்களூரு, எம்ஸ்போர்ட்) (23:04.504). புதுமுகம்: 1. துருவ் கோஸ்வாமி (23:04.504); 2. அபய் மோகன் (பெங்களூரு, 23:06.147); 3. நெய்தன் மெக்பெர்சன் (புனே, மொமமண்டம் மோட்டார்ஸ்போர்ட்ஸ்) (23:08.494).

ராயல் என்பீல்டு கான்டினென்டல் ஜிடி கோப்பை (பந்தயம் 1, 9 சுற்றுகள்) – : 1. ரோஹன் ஆர் (கோயம்புத்தூர்) (11:44.984); 2. நவநீத் குமார் எஸ் (புதுச்சேரி) (11:45.320); 3. அனிஷ் ஷெட்டி (பெங்களூரு) (11:45.470). அமெச்சூர்: 1. யோகேஷ் பி (பெங்களூரு)(12:16.480); 2. ஜோஹ்ரிங் வாரிசா (உம்ராங்சோ) (12:16.891); ஜான்சன் சல்தான்ஹா (மங்களூரு) (12:22.450).பந்தயம் 2 (6 சுற்றுகள்) – புரொபஷனல் : 1. நவநீத் குமார் எஸ் (07:48.397); 2. அனிஷ் ஷெட்டி (07:50.894); 3. ரோஹன் ஆர் (07:51.227). அமெச்சூர்: 1. யோகேஷ் பி (பெங்களூரு) (08:08.594); 2. ஜோஹ்ரிங் வாரிசா (08:10.664); 3. ஜான்சன் சல்தான்ஹா (08:21.798).

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

தி ரைஸ் அமைப்பின் உலகத் தமிழ் தொழிலதிபர்கள், திறனாளர்கள் மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம்

தஞ்சாவூர், நவ. 17-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் தி ரைஸ் அமைப்பின் சார்பில் ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறும் 14 வது உலகத் தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய தி ரைஸ் அமைப்பின் நிறுவனர் ஜெகத் கஸ்பர்: (தி ரைஸ்) அமைப்பு நடத்தும் 14 வது உலகத் தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் மாநாடு வரும் ஜனவரி 8 முதல் 11ம் தேதி வரை சென்னையில் மிஜிசி கிராண்ட் சோழா நட்சத்திர விடுதியில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் 40 க்கும் மேலான நாடுகளின் ஆயிரத்திற்கும் மேலான வெற்றித் தமிழ் தொழிலதிபர்கள் மற்றும் திறனாளர்கள் கலந்து கொள்கிறார்கள். பல்வேறு துறைகளின் முக்கிய தமிழ் ஆளுமைகள், தமிழகத்தின் முக்கிய அமைச்சர்கள் பங்கேற்று சிறப்பு செய்கின்றனர்.

தமிழர்கள் உள்ளூரில் செய்யும் தொழில்களை உலகமயப்படுத்துவது, ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் தமிழர்களுடைய உலகளாவிய வலை பின்னல்களை வசப்படுத்துவது, தொழில் வணிக வளர்ச்சிக்கு அடிப்படை தேவையான மூலதனத்தை திரட்ட வழிகாட்டுவது மாநாட்டின் நோக்கம். மாநாடு மூலமாக வடகிழக்கு இலங்கை, மலையகம், இந்திய தமிழகம் மற்றும் மலேசிய நாடுகளில் தொழில் தொடங்க விரும்பும் ஸ்டார்ட் அப் தொழில் முனைவோர் 20 பேருக்கு தொடக்க நிலை நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில், பெண்களுக்கு சிறப்பு முன்னுரிமையும் அளிக்கப்பட உள்ளது.

மேலும் மாநாட்டில் பங்கேற்க விரும்புவோர் www.tamilrise.org என்ற இணையதளம் மூலமாகவும், 9150060032, 9150060035 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தார்.

வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு

தென்காசி மாவட்டம் தென்காசியில் உள்ள அறிவுசார் மையம் மற்றும் கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்டத்தின் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் கல்விச்சேவைகள் கழகம் சங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த முகாம்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2025 முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அன்னாபிஷேக விழா

புதுக்கோட்டை, நவ. 17-

ஐப்பசி மாதம் பெளர்ணமியொட்டி 21 வகை திரவிய பொருள்களால் அபிஷேகம் நடந்தது. புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் வட்டம் மீமிசல் சத்திரம் பட்டணத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பிரேக்குஜாம்பிகைசமேத ஸ்ரீ அர்ஜுனேஸ்வரர் திருக்கோவில் பனிரெண்டாம் ஆண்டு அன்னாபிஷேகம் அன்னதானம் 50 மூட்டைகள் அரிசியால் சாதம் சமைத்து அன்னாபிஷேகம் செய்யப்பட்டு லிங்கத்தின் மேல் சாதம் சாத்தப்படும் ஒவ்வொரு சாதமும் லிங்கத்தின் தன்மையைப் பெறுகிறது இதனால் ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான லிங்கத்தை தரிசிக்கும் புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதிகம். இதில் சத்திரம் பட்டினம் பெளர்ணமி கமிட்டியாளர்களால் அன்னதானம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டார்கள்,

ஸ்ரீ கல்யாண கருப்பண்ண சுவாமி கோவிலில் திருவிளக்கு பூஜை

மதுரை, நவ. 17-

மதுரை வண்டியூர் சௌராஷ்டிராபுரம் குறிஞ்சி நகர் 8வது தெருவில் உள்ள ஸ்ரீ கல்யாண கருப்பண்ண சுவாமி ஸ்ரீ கன்னிமூல கணபதி ஸ்ரீ மகா பரம முனீஸ்வரர் ஸ்ரீ குழந்தை பேச்சி அம்மன் கோவிலில் நடைபெற்ற அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு உலக நன்மை வேண்டியும், மழை பெய்ய வேண்டியும், விவசாயம் செழிக்கவும் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் அப்பகுதியை சேர்ந்த சிறுமிகள் உட்பட பெண்கள் ஏராளமான கலந்து கொண்டு திருவிளக்கு ஏற்றி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் சிறப்பாக செய்திருந்தனர்.

புகையிலை, குட்கா பொருட்கள் எடுத்து வந்தவர் கைது

விழுப்புரம் மாவட்டம் காணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காணை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் காவல் உதவி ஆய்வாளர் அன்பழகன் தனிப்பிரிவு தலைமை காவலர் ஹரிராஜன் மற்றும் போலீசார் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் குட்கா பொருள் சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த போது, சந்தேகத்திற்கு இடமாக நின்றிருந்த கண்டாச்சிபுரம் தாலுகா, நாயனூர் கிராமம் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த, தேவராஜ் மகன் வீரமணி (24) என்பவர் என்பவரை பிடித்து விசாரணை செய்த போது அவர் வைத்திருந்த பையில் 5000 மதிப்புள்ள 5 கிலோ புகையிலை குட்கா பொருட்களை காணை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

உயர்கல்விக்கான போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை ஆட்சியர் ஆய்வு

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு நடைபெற்ற உயர்கல்விக்கான போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகளை ஆட்சியர் ஆய்வு

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் அகரப்புத்தூர்-மணவெளி உயர்மட்ட பாலம் அமைக்கும் பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சிறப்பு கிராம சபைக் கூட்டம்

பிர்சா முண்டாவின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டங்களில் ஒன்றான அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், ஆச்சாங்குட்டப்பட்டி ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்இரா.பிருந்தாதேவி பார்வையாளராகக் கலந்துகொண்டார். உடன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சங்கமித்திரை, ஆச்சாங்குட்டப்பட்டி ஊராட்சிமன்றத்தலைவர் எஸ்.பிரபு உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

வாக்காளர் பட்டியல் திருத்த முகாம்

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் மாநகராட்சி கோட்டை துவக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் திருத்த முகாம் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கும்பகோணம் மாநகராட்சி சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்

கும்பகோணம், நவ. 17-

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பருவமழை பெய்வதும் வெயில் அடிப்பதுமாக இருந்து வருகிறது. பருவகால மாற்றத்தினால் பலரும் காய்ச்சல் இருமல் உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கும்பகோணம் மாநகராட்சி சார்பில் காரநேசன் ஆஸ்பத்திரியில் தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்கள் ஆகியோருக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. இந்தமுகாமிற்கு துணை மேயர் சு.ப.தமிழழகன் தலைமை தாங்கினார். மருத்துவ முகாமில் தூய்மை பணியாளர்களுக்கு அனைத்து பரிசோதனைகளும் செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. இதுகுறித்து மாநகர் நல அலுவலர் திவ்யா கூறுகையில், கும்பகோணம் மாநகராட்சியில் சுமார் 580க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் உள்ளனர். தற்போது மழைக்காலம் தொடங்கியுள்ளதால் தூய்மை பணியாளர்களுக்கு மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாமில் 4 டாக்டர்கள் மூலம் அனைத்து பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளது.

இந்த பரிசோதனையில் ஏதேனும் நோய் அறிகுறி தென்பட்டால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யபடுகிறது.

இந்த முகாமை தொடர்ந்து மாநகராட்சியல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.

குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை நீடிப்பு

தென்காசி, நவ.17-

வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் தீவிரமடைந்து வரும் நிலையில் தென்காசி மாவட்டத்தில் நேற்று காலை முதல் பரவலாக கனமழை பெய்தது. இதனால் முக்கிய நீரோடைகள், நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத் தொடங்கியது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக தென்காசி மாவட்டத்தில் முக்கிய சுற்றுலா தலமாக கருதப்பட்டு வரும் குற்றால அருவிகளிலும் நேற்று மாலையில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது.

பழைய குற்றாலம் அருவியில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தால் நடைப் பகுதிகள் மற்றும் கார் பார்க்கிங் வரையில் தண்ணீர் வழிந்து ஓடியது.

அதேபோன்று மெயின் அருவியிலும் பாதுகாப்பு வளைவை தாண்டி தண்ணீர் ஆர்ப்பரித்தது. இதனால் கயிறுகளை கட்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

ஐந்தருவியில் 5 கிளைகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்ததால் அங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு நேற்று மாலை முதல் குளிக்க தடை விதிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் இன்று காலையில் மெயின் அருவி, பழைய குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு சற்று குறைந்து நீர்வரத்து சீரானது. இதைத்தொடர்ந்து ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவியில் குளிக்க சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்பட்டனர்.

இன்று விடுமுறை தினம் என்பதால் அருவிகளில் குளிக்க சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. ஐந்தருவியில் சுற்றுலாப் பயணிகள், அய்யப்ப பக்தர்களும் குளித்து மகிழ்ந்தனர்.

மெயின் அருவியில் மட்டும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் அங்கு குளிக்க தடை நீடிக்கப்பட்டுள்ளது. மற்ற அனைத்து அருவிகளிலும் சுற்றுலாப் பயணிகள் குளித்து மகிழ்ந்தனர்.

மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கல்

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், அரிசிபாளையம், செயிண்ட் மேரிஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2024-25ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகளை மாணவிகளுக்கு வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர் மு.கபீர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

5வது நாளாக மழை

புதுச்சேரியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின

புதுச்சேரி, நவ.17-

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புதுச்சேரியில் மிதமான மழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி கடந்த 12ந் தேதி முதல் மழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து பகலிலும், இரவிலும் அவ்வப்போது மழை பெய்து வந்தது. இன்று 5வது நாளாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது. நேற்று இரவு அவ்வப்போது கனமழை கொட்டியது. இன்று காலையிலும் தொடர்ந்து மழை பெய்தவாறே உள்ளது.

இதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. தற்காலிக பஸ் நிலையமான ரோடியர் மில் திடலில் மழை நீர் தேங்கியதால் சேறும், சகதியுமாக மாறியது. இதனால் பயணிகள் பெரிதும் அவதிக்குள்ளாகினர். புதுச்சேரியில் 5 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் தெருவோர சிறு வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.

அதுபோல் கட்டிட தொழிலாளர்கள் வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கி போயினர். தொடர் மழை காரணமாக புதுச்சேரியின் நெற்களஞ்சியமான பாகூர் பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

அதுபோல் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்களும் நீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதுபோல் வில்லியனூர், திருக்கனூர், மண்ணாடிப்பட்டு, நெட்டப்பாக்கம் ஆகிய பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட நெல், மணிலா, மரவள்ளி, கரும்பு போன்றவை மழை நீரில் மூழ்கியுள்ளது.

மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை ஆட்சியர் தொடங்கி வைத்தார்

மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, பள்ளிகொண்டா சிக்ஷ கேந்திரா பள்ளியில் தொடங்கி வைத்து தலைமையுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் செ.மணிமொழி, மாவட்ட கல்வி அலுவலர்கள் தயாளன், மகாலிங்கம், ஒருங்கிணைந்த பள்ளி கல்வி உதவி திட்ட அலுவலர் ஜெகதீஸ்வரர் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்

காரைக்காலில் வீதி வீதியாக சைக்கிளில் சென்று குப்பைகளை அகற்ற கலெக்டர் மணிகண்டன் உத்தரவு

காரைக்கால், நவ. 17-

காரைக்காலில் வீதி வீதியாக சைக்கிளில் சென்று குப்பைகளை அகற்ற கலெக்டர் மணிகண்டன் உத்தரவிட்டார்.

காரைக்கால் மாவட்ட நகரப் பகுதி சாலைகளில் உள்ள குப்பைகள் முறையாக அள்ளப்படுவதில்லை என பொதுமக்களிடமிருந்து வந்த தொடர் புகாரை அடுத்து, நேற்று காலை 7 மணி சுமாருக்கு மாவட்ட கலெக்டர் மணிகண்டன் திடீரென சைக்கிளில் வீதி வீதியாக பயணம் செய்து நகர் பகுதியில் சாலையில் தேங்கி கிடக்கும் குப்பைகளை ஆய்வு செய்தார். குறிப்பாக காரைக்கால் காமராஜர் சாலை, திருநகர், பெரிய பேட், கல்லறை பேட் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் நடந்து சென்ற பொது மக்களிடம் இப்பகுதிகளில் தினசரி குப்பைகள் சுத்தம் செய்யப்படுகிறதா? என கேட்டறிந்தார். அதேபோல் ஒரு சில சாலையில் குப்பைகளை சுத்தம் செய்து கொண்டிருந்த தனியார் நிறுவன ஊழியர்களிடம் நலம் விசாரித்து, குப்பைகளை வீடுகள் தோறும் மட்டுமின்றி சாலைகளிலும் தினசரி சுத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக கையுறைகள் அணிந்து குப்பைகளை சுத்தம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் சாலைகளில் குப்பைகளை தேங்கவிடக் கூடாது. மழைக்காலம் என்பதால் குப்பைகளை தேங்கவிட்டால் அவை சாக்கடையில் கலந்து சாக்கடை அடைப்பிற்கு வழிவகுக்கும், எனவே குப்பைகளை தேங்கவிடாமல் சுத்தம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார். அதேபோல் பொதுமக்களிடம் வீடுகள் தோறும் தினசரி குப்பைகள் சுத்தம் செய்யப்படுகிறதா என கேட்டு அறிந்தார்.

ஆய்வின்போது, பொதுமக்கள் மாவட்ட கலெக்டர் மணிகண்டனை நேரில் சந்தித்து இலவச மனை பட்டா ரேசன் கடையில் தரமான அரிசி தடை இல்லாத மின்சாரம் சாலை சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். அதற்கு மாவட்ட கலெக்டர் மணிகண்டன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். கலெக்டர் மணிகண்டனின் திடீர் சைக்கில் ஆய்வு பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஆய்வின் போது ஹெச் ஆர் ஸ்கொயர் என்கிற தனியார் நிறுவன அதிகாரிகளும் உடன் சென்றனர்.

திமுக விவசாய அணி அமைப்பாளர் பிறந்தநாள் விழா

புதுச்சேரி காரைக்கால் மாநில திமுக விவசாய அணி அமைப்பாளர் கொன்ன காவேளி பிரபு என்கிற பிரித்திவிராஜ் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடினார். அது சமயம் காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித், நெடுங்காடு வட்டார கமிட்டி தலைவர் குளக்குடி மாறன் உள்ளிட்ட பலர் மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

பட்டியலின மக்களுக்கு பட்டா வழங்கும் இடத்தில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம்: ஆத்திரமடைந்த கிராம மக்கள் கொட்டகை போட்டதால் பரபரப்பு

திருவெண்ணெய்நல்லூர், நவ. 17-

திருவெண்ணெய்நல்லூர் அருகே மணக்குப்பம் கிராமத்தில் பட்டியலின மக்களுக்கு பட்டா வழங்கும் இடத்தில தனிப்பட்ட நபர் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்ததால் ஆத்திரமடைந்த பட்டியலின மக்கள் அந்த இடத்தில் கொட்டகை அமைத்தனர் இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மணக்குப்பம் கிராமம். இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டியலின மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த 2005ல் அந்த கிராமத்தில் உள்ள பட்டியலின மக்களுக்கு பட்டா வழங்க அங்குள்ள நிலத்தை கையகப்படுத்தி அரசின் நிலமாக பதிவேற்றம் செய்யப்பட்டது. இந்த இடத்திற்கு உரிய இழப்பீடு கேட்டு அந்த கிராமத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் வகையராவை சேர்ந்தவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் உரிய விசாரணை செய்து தகுதியான நபர்களுக்கு பட்டா வழங்கலாம் என உத்தரவிட்டது. இதையடுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அத்துமீறி அந்த நிலத்தில் உளுந்து பயிர் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த அந்த கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் மேற்படி இடத்தில் நேற்று அதிகாலையில் கொட்டகை போட்டனர். இதனை அறிந்த திருவெண்ணெய்நல்லூர் சப் இன்ஸ்பெக்டர் விவேகானந்தன் தலைமையிலான போலீசார் சம்பவத்திற்கு சென்று விசாரணை செய்தனர். விசாரணையில் ராதாகிருஷ்ணன் தரப்பினர் இனிவரும் காலத்தில் அந்த இடத்தில் எவ்வித விவசாயம் செய்யக்கூடாது என்றும் அதேபோல் பட்டியலின மக்களும் அந்த இடத்தில் கொட்டகை போடக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது. மீறும் பட்சத்தில் காவல்துறை மூலம் எடுக்கும் நடவடிக்கைக்கு இரண்டு தரப்பினரும் கட்டுப்படுவதாக தெரிவித்தனர். இச்சம்பவத்தால் மணக்குப்பம் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா

புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ்.திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அ.ஜீவா, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் தனலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

தூத்துக்குடி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையத்தில் ஆட்சியர் ஆய்வு

தூத்துக்குடி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி உள்ளதா என மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் ஆய்வு செய்தார். உடன் மேயர் பெ.ஜெகன், மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.

கூட்டுறவு வார விழாவில் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், வேங்கிக்கால் ஊராட்சியில் உள்ள ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் கூட்டுறவு துறையின் சார்பில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 2024 நிகழ்ச்சியில் அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பூத்துறை, இரையுமன்துறை மீனவ கிராமங்களில் ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கிள்ளியூர் வட்டத்திற்குட்பட்ட பூத்துறை மற்றும் இரையுமன்துறை மீனவ கிராமங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய் குமார் மீனா, உட்பட பலர் உள்ளார்கள்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

வங்கக் கடலில் 23ஆம் தேதி காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது

நடிகை கஸ்தூரி ஐதராபாத்தில் கைது

புதுச்சேரியில் பைக், கார்களின் பதிவு வரி உயருகிறது

மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 17-11-2024 ஞாயிற்றுக்கிழமை •வெளியூர்: 18-11-2024 திங்கள்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்